
மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
21.11.2022 திங்கட்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# விக்கிரமசிங்க - சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்

## நாடாளுமன்றத்தில் இரா.சாணக்கியன்



விக்கிரமசிங்க – சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து, அதனூடாக தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இன்று(திங்கட்கிழமை) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். வெறுமனமே சர்வதேசத்தையும், தமிழ் தலைமைகளையும் ஏமாற்றும் பொய்யான வாக்குறுதிகளை ஏற்க முடியாது. பீனிக்ஸ் பறவை போல் மீண்டும் மீண்டும் எமது அரசியல் உரிமைக்காக காலம் காலமாக போராடுவோம்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்று குறிப்பிடும் போது தமிழ் சமூகத்திற்கான

02

# உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்கள் கல்முனை ஆதார வைத்தியசாலை விஜயம்

## ஒருநாள் வைத்திய சேவை திட்டத்திற்கு கிழக்கில் தெரிவு



(வி.ரி.சகாதேவராஜா)

உலக சுகாதார ஸ்தாபன வைத்திய நிபுணர்கள் நேற்றுமுன்தினம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்தனர். ஒரு நாள் வைத்திய சேவை முறையை ( Day care system) இவ் வைத்தியசாலையில் முன்னெடுப்பதற்கான

02

# இலங்கையில் குறைந்தது 56,000 குழந்தைகளுக்கு கடுமையான ஊட்டச்சத்து

(சில்மியா யூசுப்)

இலங்கையில் குறைந்தது 56,000 குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, 32 சதவீத குடும்பங்கள் இப்போது உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன, மேலும் 68 சதவீத குடும்பங்கள் உணவு அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளான குறைந்த விருப்பமான உணவை உண்ணுதல் அல்லது உணவின் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் பகுதி அளவிலான உணவுகளை உண்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்காக காத்திருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இந்த வாரத்திற்குள் கிடைக்கப்பெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணய குழு நியமனத்துடன், உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பெற தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்ட திகதியில் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக

02

# போதைப்பொருள் பாவனை தலைவிரித்து ஆடுவதற்கு இளமையில் அறநெறிக் கல்வி சீரின்மையே காரணம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் கூறுகிறார்

( வி.ரி. சகாதேவராஜா)

இன்று போதைப்பொருள் பாவனை பொதுமக்கள் மத்தியில் மட்டுமல்ல மாணவர் மத்தியிலும் தலை விரித்து ஆடுகின்றது. இதற்கு அடிப்படை காரணம் சிறுவயதில் அறநெறி கல்வி சீராக வழங்கப்படாததே.. இவ்வாறு முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பிரதித் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார். சம்மாந்துறை அஹதிய்யா பாடசாலைகளின் கூட்டிணையமும், நூறுஸ்ஸலாம் அஹதிய்யா பாடசாலையும் இணைந்து நடத்திய சேவை நலன் கௌரவிப்பு விழாவும் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் நிகழ்வும் நேற்று நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டிணையத்தின் தலைவரும் ஆசிரிய ஆலோசகருமான இசட்.எம். றிஸ்வி தலைமையில் சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா கட்டிடத்தில் நேற்று (29) சனிக்கிழமை கோலாகலமாக நடைபெற்றது. அங்கு கல்வி சமூக சேவையாற்றிய எண்மர் கௌரவிக்கப்பட்டார்கள். இஸ்லாமிய கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளர் அஷ்ஷேய்க் எம்.ஐ. அமீர், சம்மாந்துறை பிரதேச செயலாளர்

02

# பிறப்பு சான்றிதழில் தேசிய இனத்தை நீக்க யோசனை

பிறப்பு சான்றிதழில் தேசிய இனம் என்பதை நீக்குவது குறித்த யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பதிவாளர் நாயகம் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

பிறப்பு சான்றிதழில் தற்போது காணப்படும் சிங்களவர் தமிழர் பேகர் முஸ்லீம் இந்திய வம்சாவளியினர் போன்ற பதங்கள் நீக்கப்படும் என பதிவாளர் நாயகம் பிரசாத் அபேய்விக்கிரம தெரிவித்துள்ளார். சமூகத்தில் தற்போது காணப்படும் விவகாரங்கள் மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள அவர் அதேவேளை தேசிய இனம் என்பதை அகற்றுவதற்கு பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் எனவும்குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தராதரத்திற்கு ஏற்ப பிறப்பு சான்றிதழில் மாற்றங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சர்வதேச தராதரங்களின் அடிப்படையில் பிறப்பு சான்றிதழை ஒருவர் தனது தாய்மொழியிலேயே பெற்றுக்கொள்ள முடியும் ஆனால் இலங்கையில் சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எதிர்காலத்தில் வெளிநாட்டிற்கு

02






## விக்கிரமசிங்க - சம்பந்தன் ஒப்பந்தத்தை செய்து தமிழ் மக்களுக்கு தீர்வு

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்த தன்மையில் செயற்படுவோம். கோட்டா– மஹிந்த சகோதர்களுக்கு மத்தியில் ஒற்றுமையில்லாமல் கோட்டபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிபோனார். இவ்வாறு கருத்து முரண்பாடுகளுக்காக தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். என்ற வாக்குறுதியை இந்த மாதத்தில் வழங்கிக் கொள்கிறேன்.“

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தடைகளுக்கு மத்தியில் எம் உறவுகளை நாங்கள் நினைவு கூறுவோம் . “எமது மண்ணுக்காகவும், இனத்திற்காகவும், இன விடுதலைக்காகவும், உரிமைக்காகவும் போராடி வீர மரணமடைந்த எமது வீரர்களை இந்த வேளையில் நினைவுப்படுத்திக் கொள்கிறேன். 1978 ஆம் ஆண்டு எமது இளைஞர்களின் கைகளில் இருந்த பேனா பறிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு முதல் பேச்சுவார்த்தை ஊடாக அரசியல் உரிமைக்காக போராடி, பெரும்பான்மை சமூகத்தின் அரசாங்கங்களினால் ஏமாற்றப்பட்டதன் பின்னரே ஆயுதம் வழங்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு முதல் தந்தை செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தங்கள் ஆகியவை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்திய நிலை ஏற்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தடைகளுக்கு மத்தியில் எம் உறவுகளை நாங்கள் நினைவு கூறுவோம் என்றார்.

## போதைப்பொருள் பாவனை தலைவிரித்து ஆடுவதற்கு

எஸ்.எல்.எம்.ஹனிபா, கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் ,சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் ,கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர் தம்பி, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் அஷ்ஷேய்க் ஏ.சுபைதீன் ,முன்னாள் அதிபர் முத்து இஸ்மாயில், முன்னாள்ஆசிரியை நபீரா எ கதிர் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாராட்டப்பட்டார்கள்.

அங்கு விஷேடமாக சர்வமத சிறப்பு உரையை அம்பாறை மாவட்ட சர்வ சமய சம்மேளன செயலாளரும் உதவி கல்வி பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார் .

அங்கே பிரதம அதிதி மன்சூர் தொடர்ந்து உரையாற்றியபோது. அறநெறி கல்வி என்பது சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும். ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே சிறப்பானதாகும். அறநெறி ஆசிரியர்களுக்கான உதவியை நாங்கள் அனைவரும் சேர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற பொழுது அது கிடைக்கூம். சம்மாந்துறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் ஒரு குடையின் கீழ் இணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். விழாவில் பல மார்க்க அறிஞர்கள் உரையாற்றினார்கள்.

சம்மாந்துறை அஹதியா பாடசாலை கூட்டமைப்பின் செயலாளர் யூ.எல்.றைசூன் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் அறநெறி ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. மேலும் அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் ஊரின் முக்கிய மத பிரமுகர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தார்கள்

## சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்காக காத்திருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு

தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பான திகதிகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் சட்டமா அதிபர் தனது கருத்தை தெரிவிக்காததால், உரிய அறிவுறுத்தல்கள் கிடைத்தவுடன் திகதிகள் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## பிறப்பு சான்றிதழில் தேசிய

செல்லும்போது பிறப்பு சான்றிதழை மொழிபெயர்க்கவேண்டிய தேவையில்லை,என தெரிவித்துள்ள பதிவாளர் நாயகம் சில பாதுகாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன தேசிய அடையாள அட்டையை சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். விரும்பினால் தேசிய இனம் என்பதை இணைத்துக்கொள்ள முடியும், எனினும் தந்தை தாயின் திருமண நிலை காணப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







## உலக சுகாதார ஸ்தாபன நிபுணர்கள்

சாத்தியவள அறிக்கையை தயாரிக்கும் பொருட்டு மேற்படி குழுவினர் அங்கு விஜயம் செய்தனர். இவ் விஜயத்தில் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி அமெரிக்க டுக் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி சியுங்கிர்ல் அஹ்ன் மற்றும் நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் களனிப்பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியகலாநிதி செகான் வில்லியம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்களை கல்முனை ஆதாரவைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் வரவேற்றார். உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்படும் "“ஒரு நாள் வைத்திய சேவை முறைமை “(னுயல உயசந ளலளவநஅ) நிகழ்ச்சி திட்டத்திற்கு கிழக்கு மாகாணத்திலிருந்து கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செயற்பாடுகளுக்காக உலக சுகார அமைப்பின் பிரதிநிதிகள் வைத்தியசாலைக்கு கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்கள். இதன் போது, நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாளிலேயே அவருக்கான சகல மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டு குறித்த நாளிற்குள் வீடு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்வது அதன் நோக்கமாகும். அதன் மூலம் நோயாளியின் மனநிலை மிகச் சிறப்பாக அமைவதோடு அரசாங்கத்திற்கு ஏற்படும் மேலதிக விரயங்களும் தவிர்க்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையிலான வைத்திய நிபுணர் குழாம் மற்றும் பொறுப்பு அதிகாரிகளினால் பல சாதகமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதோடு பல பின்னூட்டல்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி அமெரிக்க டுக் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியர். சியுங்கிர்ல் அஹ்ன் மற்றும் நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் களனிப்பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியர். செகான் வில்லியம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டு வைத்தியசாலை நடைமுறைகளை பார்வையிட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தரமானதும் வினைத்திறனானதுமான வைத்திய சேவையை முன்னெடுப்பதன் காரணமாகவே இவ் வைத்தியசாலையை இந் நிகழ்ச்சி திட்டத்திற்கு தெரிவு செய்ததாக உலக சுகாதார நிறுவனம் நிபுணர்கள் தெரிவித்தனர்.




நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

Since 2014

# அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

25300 | வெ | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | கோ | 1988
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

24448 | வெ | 1992
ஏழாலை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
190 செ.மீ

25272 | வெ | 1978
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ | செவ்: 01

25299 | வெ | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
158 செ.மீ | சு +செவ்: 04

25274 | வெ | 1994
யாழ்நகரம் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
157 செ.மீ

25254 | வெ | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேடம்)
172 செ.மீ

25264 | வெ | 1989
திருகோணமலை | இந்து
Senior Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
172 செ.மீ | சு + செவ்: 02

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | அ | 1988
கம்பஹா | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
168 செ.மீ

25293 | வெ | 1994
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
160 செ.மீ | சு + செவ்: 08

25303 | வெ | 1998
புத்தாமுல்லை | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

24199 | வெ | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ்: 07

25262 | வெ | 1998
கொண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 07

24283 | வெ | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
160 செ.மீ | செவ்: 12

25284 | வெ | 1991
அச்சுவேலி | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
165 செ.மீ

23328 | வெ | 1994
உரும்பிராய் | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
162 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

# வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

**யாழ்ப்பாணம்**
**செல்வமஹால் 20-11-2022**

**கொழும்பு**
**தமிழ்ச்சங்கம் 27-11-2022**

இந்தியாவிலிருந்து

# பிரபல ஜோதிடர்

## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

**நவம்பர் 20, 21, 22 யாழ்ப்பாணத்திலும்**

**நவம்பர் 24, 25, 26, 27 கொழும்பிலும்**



முன்பதிவு செய்ய அழையுங்கள்
**074 172 4524**

**அருந்ததி பிரைவட் லிமிடட்** | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# சர்வ கட்சி அரசாங்கம் உருவாகும் போது மாத்திரமே அரசியல் தீர்வு சாத்தியமாகும்

## அங்கஜன் இராமநாதன்



த.சுபேசன்

அனைத்து கட்சி அரசாங்கம் ஒன்று உருவாகும் போது மாத்திரமே அரசியல் தீர்வு சாத்தியமாகும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். 21ஃ11 திங்கட்கிழமை பாராளுமன்றத்தில், நாட்டின் 77வது வரவு–செலவுத்திட்டம் மீதான உரையை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக பாராளுமன்றில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் நாடு சுதந்திரமடைந்த பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள வேளையில் இந்த வரவு–செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தம் மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டெழ முடியாமல் தவிக்கும் வடக்கு வாழ் மக்களின் பிரதிநிதியாகவே எனது இந்த உரை அமைகிறது.

இந்த வரவு–செலவுத்திட்டம் கொள்கை ரீதியான பட்ஜெட்டாக மாத்திரமே அமைகிறது.மக்கள் எதிர்பார்த்த பட்ஜெட் இதுவல்ல.

நிகழ்காலத்தை மீட்காமல் எதிர்காலத்தை சிந்திக்கும் பட்ஜெட்டாகவே இது அமைகிறது. மக்களை மீட்டெடுக்காமல் எதிர்காலத்தை கொள்கை அளவில் மாத்திரம் சிந்திப்பதனை ஏற்க முடியாது. 37இலட்சம் குடும்பங்கள் நிவாரணம் கோரி விண்ணப்பித்துள்ளன.மாதாந்தம் 5000ரூபாய் நிவாரணம் எப்படி போதும்?நடுத்தர வருமானமுடைய குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் செல்கின்றன. இழக்கப்படும் மனித உழைப்புகளும்–அதன் மூலமான வருமானங்களையும் எப்போதும் மூள பெற முடியாது.இன ஒற்றுமையையும்–இன உரிமையையும் மதிக்காததால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தால் 32ஆண்டு கால மனித நேரம் மற்றும் முதலீடுகள் அதனூடான வருமானங்கள் இழக்கப்பட்டுள்ளன.

இதனை உணர்ந்து எதிர்காலத்திலாவது நாட்டின் சகல கொள்கை வகுப்புக்களிலும் சகல தரப்பினரும் பங்கெடுக்க வேண்டும்.

அரசாங்கம் மீது மக்களுக்கு நம்பிக்கை மலர வேண்டும்.அதற்கு ஒரே தீர்வு மக்கள் கோரும் சர்வ கட்சி ஆட்சி முறை தான்.இதனையே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தொடர்ச்சியாக முன்மொழிகிறது. தற்போது அரசியல் தீர்வு பற்றி பேசப்படுகிறது.அந்த அரசியல் தீர்வு கூட அனைத்துக் கட்சி அரசாங்கம் அமையும் போது மாத்திரமே சாத்தியமாகும். தற்போதைய நெருக்கடி நிலைமையும் அப்போது தான் முடிவுக்கு வரும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# சாய்ந்தமருது-கல்முனை பிரச்சினையை உருவாக்கியவர்கள் அரசியல்வாதிகள்

## கே.எம். அப்துல் றசாக்(ஜவாத்) சாய்ந்தமருதில் சூழுரை




(ஏ.எல்.எம். ஷினாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது பிரதேசத்திற்கான மத்திய குழுவை அங்குரார்பனம் செய்யும் நிகழ்வு சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் (19) மாலை நடைபெற்றுது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாரை மாவட்ட செயற்குழு தலைவருமான கே.எம். அப்துல் றசாக்(ஜவாத்) இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி பதவி நிலை வழியான உரிமையை உரியவர்களுக்கு சரியாக வழங்கி வருகிறது. ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அம்பாறை மாவட்டத்தின் செயற்குழு தலைவர் பதவியை கடந்த 13 வருடங்களாக கண்டியைச் சேர்ந்த ஒருவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அது பிழை. நம்பிக்கையற்ற கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாறியிருக்கிறது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சாய்ந்தமருதை இன்னமும் நம்புகிறது. சகோதரர் ஜெமீல், சிராஸ் மீராசாஹிப் போன்றோர் கட்சியை விட்டுச் சென்றாலும் கட்சி சாய்ந்தமருதை இன்னமும் நம்புகிறது. என்னோடு பேசியது போன்று முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு இருந்தால், அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பார். நான் போட்டியிட்டிருக்க மாட்டேன். இதற்கு இந்த அரசியலை குழப்பியவர்கள் இடம் வழங்கவில்லை.

சாய்ந்தமருதிற்க்கும் கல்முனைக்கும் பிரச்சினை உருவாக்கியவர்கள் அரசியல்வாதிகள். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றஊப் ஹக்கீம், கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் போன்றவர்கள் தான் இதனை உருவாக்கியவர்கள். இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. மக்களை உதைபந்து போல் அங்குமிங்கும் அடித்து விளையாடுகின்ற கட்சிதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி. அந்தக் கட்சியின் விளையாட்டில் இன்னும் இன்னும் மாட்டிக் கொண்டு தவிக்கும் ஊராகத்தான் சாய்ந்தமருது உள்ளது.

சாய்ந்தமருது, கல்முனை என்று அது நான்காக பிரியட்டும் எந்த பிரச்சினையும் இல்லை. கல்முனை ஏற்கனவே பட்டின சபையாக இருந்த ஒரு இடம் அதற்குரிய இடத்தை தரட்டும் பரவாயில்லை. ஏன் கல்முனையும் சாய்ந்தமருதும் சண்டை பிடிக்க வேண்டும்? சாய்ந்தமருது– கல்முனையை சேர்ந்த 5000 குடும்பங்கள் உறவோடு உறவாக கலந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சாய்ந்தமருதினுடைய இரத்த உறவுகள் 3000 பேர் கல்முனையிலே திருமணம் செய்து வாழ்ந்து வருகிறார்கள். கல்முனையைச் சேர்ந்த 2000 இரத்த உறவுகள் சாய்ந்தமருதிலே வாழ்ந்து வருகிறார்கள். எங்களுக்குள் என்ன பிரச்சினை ? என்ன எதிர்ப்பு? எல்லை? எதுவுமே இல்லை. இந்த பிரச்சினைகளை பூதாகரமாக்கும் அரசியல் சிந்து விளையாட்டு நிறுத்தப்பட வேண்டும். இவற்றை உணர்ந்த மக்களாக சாய்ந்தமருது மக்கள் தமது பயணத்தை தொடர வேண்டும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைமை எதற்கும் அஞ்ச மாட்டாது, நடுங்க மாட்டாது. ஜெயிலுக்குள் மாட்டி கொலை செய்ய வேண்டும் என்று மஹிந்த குடும்பம் முனைப்போடு செயல்பட்ட போது அதில் அவர்களால் வெல்ல முடியாமல் போனதற்கு காரணம் அல்லாஹ் கூடவே இருந்தான் என்ற உண்மையை உணர்ந்திருக்கிறோம் இன்று தேசிய அளவில் பேசப்படுகின்ற அம்பாரை மாவட்டத்தின் காணி பிரச்சினைகள் குறித்து பாராளுமன்றத்தில் இருக்கின்ற எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் கூட்டி அவற்றை விரிவாக பேச வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைமை பாராளுமன்றத்தில் பேசிய விடயம் மற்றும் இஸ்லாம் பாடப்புத்தகத்தை உடனடியாக பாடசாலைகளுக்கு வழங்க வேண்டும் என்று பேசிய விடயம் போன்ற பல்வேறு விடயங்கள் முஸ்லிம் சமூகத்திற்காக றிஷாட் பதியுத்தீன் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்து வருகிறார். மூன்று தலைவர்களுடன் நான் அரசியலில் பயணித்திருக்கின்றேன் மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் உடன் இருந்திருக்கிறேன். அவருக்கு பின்னர் றஊப் ஹக்கீமுடன் இருந்திருக்கிறேன். ஆனால் மக்கள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் ரிஷாட் பதியுத்தீன் எனும் தலைமை அல்லாஹ்வுடன் நெருங்கிய நம்பிக்கையையும், தளராத மனப்பான்மையையும் கொண்ட ஒரு தலைவராக நான் பார்க்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் அஷ்ரப் தாஹிர், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ. எல் எம். மாஹிர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் சி.எம்.முபீத், கட்சியின் உயர் பீட உறுப்பினர் எம். எம் ஜுனைதீன் மான்குட்டி, மருதமுனை மத்திய குழு தலைவர் கலீல் முஸ்தபா,சாய்ந்தமருது மத்திய குழுவின் தலைவர் எம்.எம்.உதுமாலெப்பை, செயலாளர் ரீ.கே.எம். சாக்கீர், கொள்கை பரப்புச் செயலாளர் ஏ.எல்.அன்சார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புறா தீவுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஆளுநர் உத்தரவு



ஹஸ்பர்

திருகோணமலை,நிலாவெளி புறா தீவு சுற்றுலாப் பகுதிக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை முறையான முறைகளின் கீழ் துரிதப்படுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் (17) உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். சுற்றுலாப் பிரதேசத்தை பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்தபட்ச வசதிகள் இல்லை என தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை பரிசீலித்த ஆளுநர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலா வலயங்களில் அமைந்துள்ள ஹோட்டல் உரிமையாளர்களுடன் திருகோணமலையில் உள்ள ஆளுனர் செயலகத்தில் நடைபெற்ற விசேட சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். புறா தீவை பார்வையிட வரும் சுற்றுலா பயணிகளிடம் படகு உரிமையாளர்கள் பணம் வசூலிப்பதும், அதற்கு கட்டுப்பாடு இல்லை என்பதும் தெரியவந்தது. அப்பகுதிக்கு பொறுப்பான வனவிலங்கு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட படகுகள் மட்டுமே அங்கு போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

பதிவு செய்யப்படாத படகுகளில் பயணம் செய்யக் கூடாது என்ற அறிவிப்பு பலகைகளை அப்பகுதியில் எச்சரிக்கை விடுக்குமாறு மாவட்ட வனவிலங்கு அலுவலருக்கு அறிவுறுத்தினார். இதனிடையே, உடனடியாக சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்குமாறு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சித் தலைவர்களுக்கு ஆளுநர் உத்தரவிட்டார். மேலும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களின் தூய்மை மற்றும் சுகாதார வசதிகள் குறித்து ஆய்வு செய்ய புதுப்பிக்கப்பட்ட திட்டத்தைத் தயாரிக்கவும் ஆளுநர் அறிவுறுத்தினார். இணிலு ஆளுநரின் செயலாளர் எல். பி. மதநாயக்க, மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் ஹரி பிரதாப், திருகோணமலை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரம்மனகே, திருகோணமலை, நகர மற்றும் மற்றும் குச்சவெளி உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், கரையோர பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கலால் திணைக்களம், இலங்கை கடற்படை , பெருமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மனித விழுமியங்களையும், நல்லொழுக்கத்தினையும் தளமாக கொண்டதே “அறநெறி”கல்வியாகும்



(அ . அச்சுதன்)

திருகோணமலை கெவுளிமுனை வெளிச்ச வீட்டை அண்டியதான, சூடைக்குடா மத்தளமலை ஆலய முன்றலில். நேற்று (20) அறநெறி பாடசாலை நிருவாகத்தின் வேண்டுதலுக்கு அமைவாக திருகோணமலை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் அனுசரனையில் ,சுவீஸ் நாட்டில் வாழும் முரளி நடேசன் தம்பதியினரின் மகளான சுகிர்தா அவர்களின் 18 வது பிறந்த தினத்தை முன்னிட்டு “கல்வி மேம்பாட்டு நிகழ்வாக”சூடைக்குடா அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு அன்னதான நிகழ்வும், கற்றல் உபகரணமும் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் நிதியத்தின் தலைவர் கனகசபை தேவகடாட்சம் .கருத்துரைக்கையில் மனித விழுமியங்களுடன் கூடிய நல்லொழுக்கம்,பிற உயிர்களிடத்து அன்பு செலுத்தும் பண்பு.என்பன அறநெறி கல்வியினூடாகவே மேலோங்கும் .என்றும் அதனால் ஒவ்வொரு ஊர்களிலும் ஆலயமும் அதனுடன் சார்ந்த அறநெறி சாலைகளும் கட்டாயமானது எனவும் கருத்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com
திங்கட்கிழமை
சுபீட்சம் 21 நவம்பர் 2022


# திருகோணமலை சிறைச்சாலையின் புதிய ஜெயிலர் கடமையை பொறுப்பேற்பு



**எப்.முபாரக்**

திருகோணமலை சிறைச்சாலையின் புதிய பிரதான ஜெயிலராக ஆர்.மோகனராஜா கடமைகளை இன்று(21) உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார். சிறைச்சாலையின் பிரதான ஜெயிலராக கடமையாற்றிய சம்பத் ஜெயவர்த்தன அங்குணுபொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்தே பிரதான ஜெயிலர் ஆர். மோகனராஜா நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பிரதான ஜெயிலராக கடமையாற்றி ஆர்.மோகனராஜா திருகோணமலை சிறைச்சாலையின் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் பொலன்னறுவை சிறைச்சாலையிலும் பிரதான ஜெயிலராக கடமையாற்றிஉள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று கல்முனையில் உலக நீரிழிவு தின சைக்கிள் பவனி



**(வி.ரி.சகாதேவராஜா)**

உலக நீரிழிவு தினத்தை ஒட்டி கல்முனை ஆதார வைத்தியசாலையினர் இன்று(21) திங்கட்கிழமை பைசிக்கிள் வண்டி பவனியை மேற்கொண்டனர். கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இப்பவனி இடம் பெற்றது. இதன் போது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் ஊழியர்கள் அபிவிருத்திச் சபை குழுவினர் நலன் விரும்பிகளென பலரும் பைசிக்கிளில் பயணித்தார்கள். நீரிழிவு நோயை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இச் சைக்கிள் பவனி ஏற்படுத்தப்பட்டது.

பவனியானது வைத்தியசாலையில் ஆரம்பித்து கல்முனை நகர் ஊடாக வலம் வந்து மீண்டும் வைத்திய சாலையை வந்தடைந்து . அங்கு ஒரு விழிப்புணர்வு கூட்டம் இடம்பெற்று பவனி முடிவடைந்தது.

# ஒன்பது பவுண் தங்க நகைகள் திருட்டு

**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராறு பகுதியில் பட்டப்பகுதியில் ஒன்பது பவுண் தங்க நகைகளை திருடிய குற்றச் செயலுடன் தொடர்புடையதாக தெரிவித்து சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை இன்று(21) காலை கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கந்தளாய் அணைக்கட்டு பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேராறு,அணைக்கட்டு பகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து ஒன்பது பவுண் தங்க நகைகள் மற்றும் பணமும் ஞாயிற்றுக்கிழமை(20)பகல் வேளையில் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ ார் தெரிவிக்கின்றனர். வீட்டு உரிமையாளரான ஆசிரியர் வெளியில் சென்றதன் பின்பு யன்னல் வழியாக வீட்டுக்குள் புகுந்து சந்தேக நபர் கைவரிசையை காட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டு உரிமையாளர் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

**தினமும் உங்கள் சுபீட்சம் பத்திரிகை பார்வையிட www.supeedsam.com இணைய தளத்திற்கு செல்லுங்கள்**




# நூற்றாண்டு முன்னேற்பாடு



**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

மட்டக்களப்பு – ஏறாவூர்ப் பிரதேசத்தில் சுமார் நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த அறபா வித்தியாலயத்தில் நூற்றாண்டு விழாவையிட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் தற்போதைய கபொத சாதாரண தர வகுப்பு மாணவர்கள் பயன்படுத்தும் இரண்டு வகுப்பறைகள் 2003 ஆம் ஆண்டில் இதே வகுப்பறையில் தரம் 9 இல் கல்வி கற்ற பழைய மாணவர்களினால் முழுமையாகப் புனரமைக்கப்பட்டு பாடசாலைக்குக் கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் எஸ்எம்எம். நவாஸ் தலைமையில் இதுதொடர்பாக நடைபெற்ற விசேட நிகழ்வில் முன்னாள் அதிபர் ஏசிஎம். சயீட் பிரதம அதிதியாகக்கலந்துகெண்டார். இவ்வகுப்பறைகளின் தரைகள் மற்றும் சுவர்கள் சீரமைக்கபட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளதுடன் வகுப்பறைத் தளபாடங்களும் கையளிக்கப்பட்டன. வகுப்பறைச்சூழல் மலர்ச்செடிகள் வைக்கப்பட்டு ரம்யமான காட்சியளிக்கிறது.

இப்பாடசாலையில் 2003 ஆம் ஆண்டில் கல்வி கற்றவர்கள் தற்போது பல்வேறு துறைகளில் ஆளுமையுடன் சிறந்த பிரஜைகளாகத் திகழ்வதாகவும் இவ்வேலைத்திட்டம் ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக அமையும் என்றும் இங்கு கருத்துரைக்கப்பட்டது. ஏறாவூர்ப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதான அரசியல்வாதிகள் அறபா வித்தியாலயத்திலேயே தமது ஆரம்பக்கல்வியை கற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும் நேற்றைய தினம் (20) திகதி மட்டக்களப்பு திராய்மடுவில் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் மாவட்ட செயலகத்திற்கும் தங்களது சேவைகளை சிறப்பாக வழங்கி ஓய்வுபெற்ற மற்றும் வேறு அரச திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று கடமைகளை ஆற்றிவருகின்ற சிரேஸ்ட உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார நிகழ்வும் இந்த வருடத்தின் ஒன்று கூடல் நிகழ்வுமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது, நலன்புரிச்சங்க போசகரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் தலைமையில் திராய்மடு பொருளாதார மத்திய நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

மௌன இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வானது நலன்புரிச்சங்க தலைவரும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந் அவர்களின் வரவேற்புரையினை தொடர்ந்து உடலுக்கும் மனதிற்கும் வலிமை சேர்க்கும் வண்ணமான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், கிளைகள் ரீதியாக உத்தியோகத்தர்களினால் பல கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டது. இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரின் உரை, நினைவு உரைகள் என்பன இடம்பெற்றதனைத் தொடர்ந்து குறித்த நிகழ்விற்கு அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்த ஓய்வுபெற்ற மற்றும் வேறு அரச திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற சிரேஸ்ட உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதுடன், பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. அத்தோடு கௌரவிக்கப்பட்டவர்களின் ஏற்புரையும் இடம்பெற்றிருந்தது.

மாவட்ட செயலக முன்னால் பிரதம கணக்காளர்களான எஸ்.நேசராஜா, கே.ஜெகதீஸ்வரன்,மாவட்டசெயலகத்தின்முன்னால் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செலியன், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ரீ.தேவகாந்தன், மாவட்ட செயலகத்தின் முன்னால் கணக்காளர் கே.பிறேம்குமார் உள்ளிட்ட மேலும் பல உத்தியோகத்தர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி.இந்திராவதி மேகன், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், மாவட்ட செயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர். ஜதீஸ்குமார், ஆ.சுதாகரன், வீ.நவநீதன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ.ஈஸ்வரன், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஆர். அன்வர் சதாத், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவி பணிப்பாளர் ஏ.எஸ். எம்.சியாத், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள மாவட்ட கணக்காளர் எஸ்.எம்.பஸீர், மாவட்ட விவசாய பணிப்பாளர் இராஜதுரை ஹரிகரன் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# உதயபுரியில் டெங்கு ஒழிப்பு



**(அ. அச்சுதன்)**

திருகோணமலை உதயபுரி கிராமத்தில் உதய விருட்சம் சனசமூக நிலையத்தின் ஊடாக உதயபுரியில் டெங்கு ஒழிப்பு நிகழ்வு நேற்று (20) இடம் பெற்றது. இந் நிகழ்வில் உப்புவெளி பொலிஸ் அதிகாரி, சுகாதார பரிசோதகர், கிராம உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.



# பல்சமய ஒன்றியத்தினால் மதஸ்தலங்களில் மரநடுகை



பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மதஸ்தலங்களிற்கிடையே அந்நியோன்னியத்தை ஏற்படுத்துமுகமாக மதத்தலைவர்களுக்கிடையேயான ஒன்றுகூடல்கள் அன்மைக்காலமாக இடம்பெற்று வரும் நிலையில் மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்தானத்தில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது. மதங்களிடையே ஒற்றுமையை பலப்படுத்தி, ஐக்கியத்தை மேம்படுத்துவதற்காக இவ்வாறான கலந்துரையாடல்களை மட்டக்களப்பு பல்சமய ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான கலந்துரையாடல்களின் நினைவாக மதத்தலைவர்களினால் கனிதரும் மரங்கள் நடப்பட்டு வரும் நிலையில், ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்தான வளாகத்திலும் சர்வமத தலைவர்களினால் பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டது.

மட்டக்களப்பு கரீத்தாஸ் எகெட் நிறுவனத்தின் இயக்குணர் அருட்பணி அழகுதுரை யேசுதாசன் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடல் நிகழ்வில், பல்சமய ஒன்றியத்தின் தலைவர், சிவஸ்ரீ வீ.கே. சிவபாலன் குருக்கள், பல்சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் அடிகளார், பிள்ளையாரடி விஸ்வரூப ஆஞ்சனேயர் ஆலய பிரதம குரு உத்தம ஜெயதீஸ்வர குருக்கள், ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்தான நிலையத்தின் விகாராதிபதி உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளதுடன், குறித்த நிகழ்வை கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் சமாதான செயற்திட்ட இணைப்பாளர் இக்னேசியஸ் கிறிஸ்டி இணைப்பாக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான நல்லினக்க நடடிக்கைகளை மட்டக்களப்பு எகெட் ஹரீத்தாஸ் நிறுவனத்தின் அனுசரனையுடன், மாவட்ட பல்சமய ஒன்றியம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்லடி - டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் கிறிஸ்து அரசர் பெருவிழா



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பாதுகாவலராம் கல்லடி – டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தில் கிறிஸ்து அரசர் பெருவிழாதிருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன், புனித சிசிலியாவின் பெருவிழாவும் சிறப்பிக்கப்பட்டது. குறித்த பெருவிழா திருப்பலியை புனித இஞ்ஞாசியார் ஆலய பாடகர் குழாத்தினர் இணைந்து சிறப்பித்ததுடன், குறித்த திருவிழா திருப்பலியை பங்குத் தந்தை அருட்தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளாருடன், அருட்தந்தை ஜோன் ஜோசப் மேரி அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்திருந்ததுடன், அதிகளவிலான பங்குமக்கள் திருவிழா திருப்பலியில் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தின் ஆறாவது செயற்பாடு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

சிவாநந்த நண்பர்கள் வட்டத்தால் "மகிழ்ச்சிகர மாணவர் பயணம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் ஆறாவது மாதாந்த பாடசாலைத் திட்டம் கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் ஆறுமுகம் இராசு தலைமையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு உதவும் முகமாக "மகிழ்ச்சிகர மாணவர் பயணம்" எனும் தொனிப்பொருளில் சிவானந்தாவில் படித்த நண்பர்களின் மாதாந்தச் செயற்பாடாக மேற்படி திட்டமானது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

அதன்படி இம்மாதத்திற்கான திட்டத்தில் கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட சுமார் 60 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கப்பட்டது. அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சமூக சேவகரும் சிவானந்த நண்பருமான ரவீந்திரன் ரஜீந்திரன் அவர்களின் மருமகள் பிரஸ்னவி கமலதாசின் பன்னிரண்டாவது பிறந்தநாள் பரிசாக ரஜீந்திரன் அவர்களின் நிதி அனுசரணையில் மகிழ்ச்சிகர மாணவர் பயணத்தின் ஆறாவது திட்டம் பாடசாலையின் அதிபர் ஆறுமுகம் இராசு தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மகிழ்ச்சிகர மாணவர் பயணத் திட்டத்தினை கலாநிதி க.விவானந்தராஜா மற்றும் கு.புவதாஸ் பாடசாலை விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் ஒருங்கிணைப்பினை மேற்கொண்டிருந்தனர்.

பாடசாலைக்கான வலயக் கல்வி பணிமனையின் இணைப்பாளர் நிரஞ்சன் அவர்கள் நிகழ்வில் அதிதியாகக் கலந்து சிறப்பித்ததோடு உரையினையும் ஆற்றியிருந்தார். கல்வியினை ஆதாரமாகக் கொண்டு மாணவர்கள் எவ்வாறு வாழ்வை வளப்படுத்தலாம் என்பதையும் வறுமையை எவ்வாறு கல்வியால் முறியடிக்கலாம் என்பதை கலாநிதி து.பிரதீபன் பல ஆதாரங்களுடன் மாணவர்களுக்கு விளக்கினார்.

மகிழ்ச்சிகர மாணவர் பயணத்தில் சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றின் முக்கியத்துவம் மற்றும் ஏற்றத்தாழ்வில்லா மாணவர் மகிழ்ச்சிச் சூழலை உருவாக்குதல் பற்றி பல ஆக்கபூர்வமான கருத்தியல்களைத் தாங்கிய உரையினை கலாநிதி த.விவானந்தராசா விளக்கியிருந்தார். அ.சித்தாத்தன் சிறுவர் மேம்பாட்டில் கவனிக்கப்படவேண்டிய ஆழமான கருத்துக்களைக் கூறியதோடு நன்றியுரையினையும் வழங்கினார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் வட்ட அங்கத்தவர்கள் மற்றும் அனுசரணையாளர் ரஜீந்திரனின் குடும்ப உறவுகள் அனைவராலும் மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கப்பட்டன.

1998 சாதாரண தரம் 2001 உயர்தர நண்பர்களால் நடைபெற்றுவரும் இந் நிகழ்வானது அடுத்த மாதம் தொடக்கம் 1997 க.பொ.த சாதாரண தரம் மற்றும் 2000 க.பொ.த உயர்தர நண்பர்களும் இணைந்து சிவானந்த நாமத்தில் அமையப் பெறும் ஓர் காத்திரமான அமைப்பின் பெயரில் இடம்பெறுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண நுண்கலை இளம் கலைஞர் விருது முரளிதரனுக்கு வழங்கி வைப்பு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன் போது சிற்பக்கலையில் காத்திரமான பங்களிப்பை வழங்கியமைக்காகவும், பல்வேறு சாதனைகள் புரிந்தமைக்காகவும் மட்டக்களப்பைச் சேர்ந்த பரமசிவம் முரளிதரன் என்பவர் 2021 ஆம் ஆண்டிற்கான நுண்கலை இளங்கலைஞர் (சிற்பம்) எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் 1999 ஆம் ஆண்டு சிற்பத்துறையில் தேசிய ரீதியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றிருப்பதுடன் நுண்கலை படைப்புகள் தொடர்பாக பல்வேறு விருதுகளும், கௌரவங்களும் பெற்றிருக்கிறார்.

மரம், மெழுகு மற்றும் சீமெந்து சிற்பங்களில் ஈடுபாடுடைய இவர் மட்டக்களப்பு நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள சாரண மாணவர் சிற்பம், வண. வில்லியம் ஓல்ட் அடிகளாரின் சிற்பம் உட்பட பல்வேறு சிற்பங்களை படைத்துள்ளார். அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உயர் பதவியில் இருந்தாலும், கலைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் ஓவியம், இலக்கியம் மற்றும் சினிமா ஆகிய துறையிலும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஞ்சிக்குடிச்சாறு துயிலுமில்லத்தில் போராளிகளின் தலைமையிலேயே மாவீரர் தின நிகழ்வு



**(சுமன்)**

கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லத்தில் கட்சி பேதமின்றி வழமை போன்று முன்னாள் போராளிகளின் தலைமையிலேயே மாவீரர் தின நிகழ்வு முன்னெடுக்கப்படும். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என முன்னாள் போராளியான நாகமணி கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் தின முன்னேற்பாட்டின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லத்தில் வழமை போன்று மாவீரர் தின ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. வழமையாக முன்னாள் போராளிகளின் ஒழுங்கமைப்பின் கீழ் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்கத்தினால் தடைகள் ஏற்படுத்தப்பட்டமையால் எங்களால் இதனைச் செய்ய முடியவில்லை. ஆனால் தற்போதைய நிலையில் ஒரு சந்தர்ப்பம் அமைந்திருக்கின்றமையால் எமது உறவுகளுக்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வினை உணர்வுபூர்வமாக மேற்கொள்ள முடியும். இதனை நாங்கள் அனைத்து மாவீரர் குடும்பங்களுக்கும், உறவுகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். இதில் அனைத்து மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.

மாவீரர் தின ஏற்பாடுகளுக்காக மாவீரர் துயிலுமில்லம் துப்பரவுப் பணிகளை கட்சி பேதங்களின்றி அனைத்து தரப்பினரும் முன்னெடுத்து வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றார்கள். ஆனால் நாங்கள் வழமை போன்று இதனை முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கவுள்ளோம். இது மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வு இதற்கு கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரின், அனைத்து மக்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். எதிர்வரும் 27ம் திகதி மிகவும் எழுச்சியுடன் இந்த நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம் என்று தெரிவித்தார்.




# ஒரே தடவையில் ஆறு துறைகளில் ஆறு விருதுகளை வென்ற பல்துறை கலைஞர் வீரமுனை சுதர்சன்



**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் (2020ஃ2021 ) வீரமுனையைச் சேர்ந்த பல்துறை கலைஞர் அருளானந்தம் சுதர்சன் ஒரே தடவையில் ஆறு துறைகளில் ஆறு விருதுகளை வென்று சாதனை படைத்தார். அவர் இளங்கலைஞர் விருது, கலை இலக்கிய விருது ,பாடலாக்கம் –1 ம் இடம், சிறுகதை –1ம் இடம் ,மரபுக்கவிதை –1ம் இடம், புதுக்கவிதை –2ம் இடம் ஆகிய ஆறு விருதுகளை பெற்றவர்

கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா கடந்த வாரம் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடந்தேறியது . இதில் அருளானந்தம் சுதர்சன் இளங்கலைஞர் விருதும் கௌரவிப்பும் பாராட்டும் பெற்றதுடன் , அரச உத்தியோகத்தருக்கான கலை இலக்கிய போட்டியில் கவிதை,சிறுகதை,பாடலாக்கம் ஆகியவற்றில் முதலாம் இடத்தை பெற்று விருதுகளையும் பாராட்டுக்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டார். இவர் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் ஆவார்.விழாவில் தனியொரு கலைஞர் அதிகூடிய விருதுகளை பெற்றதும் இவரே. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யகம்பத் சிறப்பு விருந்தினர்களாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் போன்றோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.